DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,
PUDUKKOTTAI.
**SC.No. 56/2020**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of witness for | : | L.W.9 / P.W.11 | District | | புதுக்கோட்டை |
| Name | : | புஷ்பராஜ் | Calling | : | விவசாயம் |
| Father / Husband Name | : | கணேசன் | Age | : | 47 |
| Village | : | கீழநெம்மக்கோட்டை | | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X 1873, on the day of 06.10.2025

**1 வது எதிரி ஆஜர். 3 வது எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது . 2 வது எதிரி இறப்பு . எதிரியின் வழக்கறிஞர் ஆஜர் . (இன்று 3 ம் எதிரி ஆஜராகாத நிலையிலும் , சாட்சி கைப்பற்றுதல் மகஜர் மறறும் ஒப்புதல் வாக்குமூலமாக சாட்சியாக இருப்பதாலும் 3 வது எதிரியின் அடையாளம் குறித்து கேள்வி எழுப்புவது இல்லை என்ற நிலையில் விசாரணை தொடரப்பட்டது)**

**முதல் விசாரணை:–**

நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் , ஆலங்குடி தாலுகா , கீழ நெம்மக்கோட்டையில் குடியிருந்து ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன் . கடந்த 27.09.2019 ம் தேதி அன்று மாலை சுமார் 4.30 மணியளவில் நம்பம்பட்டி பேருந்து நிறுத்தத்தில் நானும் , மைக்கேல் மகன் அருள் என்பவரும் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது ஆறுமுகம் மனைவி பழனியம்மாளை போலீசார் விசாரணை செய்து கொண்டிருந்தனர். நானும், எனது மாப்பிள்ளையும் சென்று பார்த்தோம். அவர்களுக்குள் பங்காளி சொத்து பிரச்சனை இருப்பதாக சொன்னார்கள். அவர்களது பங்காளிகள் பெயர் நீலகண்டன் , முருகையா அவர்களுக்குள் பிரச்சனை நடந்ததாக சொன்னார். அப்போது போலீசார் என்னை சாட்சிக்கு வருமாறு அழைத்தார்கள் . நானும் ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்கிறேன் என்று சொன்னேன். நானும், எனது மாப்பிள்ளை அருளும் காவல் நிலையத்திற்கு சென்று கையொப்பம் செய்தோம். நாங்கள் நின்றுகொண்டிருந்த

இடத்திலேயே பழனியம்மாளிடம் வாக்குமூலம் எழுதி வாங்கினார்கள் . பின்பு காவல் நிலையத்திற்கு சென்று நாங்கள் கையொப்பம் செய்தோம் . பின்பு பழனியம்மாள் வீட்டிற்கு அழைத்துச்சென்றார்கள் . அங்கு பழனியம்மாள் கட்டையை எடுத்துக்கொடுத்தார் . அந்த கட்டை தற்போது என்னிடம் காட்டப்படுவது தானா என்றால் இந்த கட்டை தானா என்று ஞாபகமில்லை , ஆனால் அது ஆரஸ்பதி கட்டை ஆகும் . தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான் . அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து அ.சா.ஆ.4 மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்து அ.சா.ஆ.5 ஆகும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனது சகோதரியை திருமணம் செய்தவர் தான் எனக்கு மாப்பிள்ளை என்றால் சரிதான். நான் இந்து மதத்தை சார்ந்தவர் . அருள் என்பவர் கிறிஸ்துவ மதத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான் . அருளின் மனைவி இந்து மதத்தை சார்ந்தவர். நான் விவசாய வேலை செய்வதாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் . செப்டம்பர் மாதத்தில் விவசாய நடவு நடக்கக்கூடிய காலம் என்றால் சரிதான். இந்த காலத்தில் காலை முதல் மாலை வரை வயலில் வேலை நடைபெறும் என்றால் சரிதான் . கீழநெம்மக்கோட்டை ஆலங்குடியில் இருந்து தென்மேற்கில் சுமார் 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது என்றால் சரிதான் . விவசாய வேலைகள் எனக்கு ஆலங்குடியுடன் முடிந்து விடும் என்றால் சரிதான். நம்பன்பட்டி என்பது ஆலங்குடியில் இருந்து எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 5 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். போலீசார் என்னை விசாரித்தபோது எந்த இடத்திற்கு சென்று பழனியம்மாள் கட்டையை எடுத்துக்கொடுத்தார் என்று நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியிருக்கிறேன். போலீசார் விசாரித்தபோது பழனியம்மளை எங்கே வைத்து விசாரித்தார்கள் என்று நான் சொல்லவில்லை என்றால்

சரியல்ல, சொல்லியிருக்கிறேன். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. போலீசார் விசாரணையில் ஆரஸ்பதி கட்டை என்று சொல்லியுள்ளேனா என்றால் அவ்வாறு தான் சொல்லியிருக்கிறேன் . போலீசார் விசாரணையில் மாலை 4.45 முதல் 15.00 மணி வரை விசாரித்தார்கள் என்று சொன்னேனா என்றால் இல்லை . நீதிமன்றத்தில் உள்ள கட்டை ஆரஸ்பதி கட்டையா என்றால் இல்லை, தேக்கு கட்டை ஆகும் . அந்த கட்டை சுமார் 1 மீட்டர் நீளம் இருக்கும் என்றால் சரிதான் . எனக்கு மைக்கேல் மகன் அருள் என்பவரை எனக்கு தெரியாது என்றும் , காவல் உதவி ஆய்வாளர் யாரையும் கைது செய்யவில்லை என்றும் , பழனியம்மாள் கட்டை எதுவும் போலீசாரிடம் எடுத்துக்கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல . நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்துள்ளேன் என்றும், அதிலுள்ள விவரங்கள் எனக்கு எதுவும் தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல . காத்தான்விடுதி ஆலங்குடியில் இருந்து சுமார் 20 கிலோமீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரியல்ல , சுமார் 7 கிலோ மீட்டர் தூரம் இருக்கும் . அது ஆலங்குடியில் இருந்து வடகிழக்காக அமைந்துள்ளது என்றால் சரிதான்.

**மறு விசாரணை இல்லை.**

Taken down by me in open court
read over to the witnesses and
admitted by him/her to be correct.

Sd/-N.S.Meenachandra,
Sessions Judge,
Additional District Court,
*Pudukkottai.*

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,
PUDUKKOTTAI.
**SC.No. 56/2020**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of witness for | : | L.W.13 / P.W.12 | District | | புதுக்கோட்டை |
| Name | : | செல்வம் | Calling | : | விவசாயம் |
| Father Name | : | தங்கவேலு | Age | : | 53 |
| Village | : | அரையப்பட்டி, ஆலங்குடி | | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X 1873, on the day of 06.10.2025

**1 வது எதிரி ஆஜர். 3 வது எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது . 2 வது எதிரி இறப்பு . எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை:–**

நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் , ஆலங்குடி தாலுகா , கீழ அரையப்பட்டியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன் . 2019 ம் ஆண்டு எனது மகளுக்கு பிறப்பு சான்றிதழ் வாங்குவதற்கு ஆலங்குடி காவல் நிலையம் சென்றேன். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது . தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது அல்ல. என்ன ஆவணங்கள் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**இக்கட்டத்தில் அரசு தரப்பில் மேற்கண்ட சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரப்பட்டு , அனுமதி அளிக்கப்பட்டு , சாட்சியை பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும் , அப்போது கடந்த 11.10.2019 அன்று மாலை 4.00 மணிக்கு அப்போது எனது ஊரைச்சேர்ந்த நானும் , சித்திரைவேலுவும் ஆலங்குடி காவல் நிலையம் வந்தோம் என்றும் , அப்போது

சிறையில் இருந்து போலீஸ் காவலலில் எடுத்து நீலகண்ட மூர்த்தியை விசாரணை செய்தார்கள் என்றும், நீலகண்ட மூர்த்தி எந்தவித அச்சுறுத்தலும் இன்றி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், சம்பவத்தின்போது ஆரஸ்பதி கட்டைகள் இரண்டை பச்சையம்மாள் என்பவரின் காலியிடத்தில் உள்ள முள்புதரில் இருந்து எடுத்து, ஆஜர் செய்து, புலன்விசாரணை அதிகாரி முன்பு சாட்சியாக இருக்க கையொப்பமிட்டேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**

**மறு விசாரணை இல்லை.**

Taken down by me in open court
read over to the witnesses and
admitted by him/her to be correct.

Sd/-N.S.Meenachandra,
Sessions Judge,
Additional District Court,
***Pudukkottai.***